# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No.147/2019 நாள்.13.08.2025

DW2- திருமதி. எஸ்தர் மேரி க /பெ. திரு. ஆரோக்கியதாஸ்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு போட்டுள்ளார்கள் என்றால் பங்கு கேட்டு போட்டுள்ளார்கள். அவ்வாறு பங்கு கொடுப்பதில் எனக்கு என்ன ஆட்சேபணை என்றால் அந்த இடம் வாங்கி வீடு கட்டிய கடனை 2ஆம் பிரதிவாதி வெளிநாட்டிற்கு போய் சாம்பாதித்து கடனை கட்டி அதில் வீடு, கடை கட்டினார் அதனால் யாருக்கும் அதில் பங்கு கிடையாது. என் அப்பாவிற்கு மனை வாங்குவதற்கும், வீடு கட்டுவதற்கும் வசதி இல்லை என்று சொல்கிறேனா என்றால் ஆமாம். இந்த மனை எந்த வருடம் வாங்கபட்டது என்றால் 1982. அவ்வாறு வாங்கும்போது என் பெரியதம்பி 2ஆம் பிரதிவாதிக்கு 13 வயது என்றால் ஆமாம். சொத்து வாங்கிய காலத்தில் அவர் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். வீடு எப்போது கட்டபட்டது என்றால் 1991. அப்போது 2ஆம் பிரதிவாதி பணம் கொடுக்கவில்லை என்றால் இல்லை அனுப்பி கொண்டிருந்தார். என் அப்பா வீடு கட்ட பணம் கொடுக்கவில்லையா என்றால் ஆமாம். என் பெரிய தம்பி 2ஆம் பிரதிவாதி எந்த நாட்டில் இருந்தார் என்றால் சார்ஜா. 2ஆம் பிரதிவாதி என்ன வேலை பார்த்தார் என்றால் செக்யூரிட்டி. எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை இருந்தார் என்றால் 1990லிருந்து 1994 வரை இருந்தார். கேன்சல் பண்ணி வந்துவிட்டு மீண்டும் 1996இல் போனார். 2007இல் திரும்பி வந்தார். அவ்வாறு சட்டபடியாக இருந்தாரா என்றால் ஆமாம். அப்படி இருந்தால் விஷா என்ன வேலை என்ற ஆதாரம் இருக்கிறதா என்றால் 2ஆம் பிரதவாதியிடம் இருக்கிறது. என்ன சம்பளம் வாங்கினார் என்றால் நான் 1996இல் இந்தியாவில் இருந்தேன் என்ன சம்பளம் என்று தெரியாது. சொத்திற்கான பத்திரம் வீட்டுவரி, பட்டா, கரண்ட் எல்லாம் அம்மா பெயரில் உள்ளது என்றால் ஆமாம். வழக்கு போட்டுஇருக்கிற சொத்து அம்மா சொத்தா, அப்பா சொத்தா என்றால் அம்மா பெயரில் அப்பா கடன் வாங்கி வாங்கினார். அவ்வாறு அப்பா கடன் வாங்கிதான் அம்மா பெயரில் வாங்கினார் என்பதற்கு ஆதாரம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. அம்மா சொத்து இன்னாருக்கு என்று எழுதி வைக்காமல்

இறந்துவிட்டார் என்றால் ஆமாம். 2ஆம் பிரதிவாதி வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்பினார் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் என் அப்பா பெயரில் விஜசி நகர் எஸ்பிஐ வங்கியில் உள்ள கணக்கிற்கு அனுப்பியுள்ளார் என்னுடைய கணக்கிற்கும் அனுப்பியுள்ளார். வங்கி கணக்கு எதுவும் தாக்கல் செய்யமுடியுமா என்றால் பணம் அனுப்பிய சீலிப்புகள் கொஞ்சம் உள்ளது. அவரின் மாத வருமானம் தெரியுமா என்றால் தெரியாது. அவர் மாதம்மாதம் எவ்வளவு அனுப்பினார் என்ற விபரம் தெரியுமா என்றால் தம்பியும் எனது கணவரும் போய்தான் அனுப்புவார்கள் எனக்கு தெரியாது. வீடு கட்டியதற்கு எவ்வளவு செலவானது என்றால் ரூ 2 1/2 லட்சம் 1991-1993 வரை கட்டபட்டது. நாங்கள் தான் அழைத்து கொண்டோமா என்றால் என் கணவர் அழைத்து கொண்டார். விஷா வாங்கிதான் அவரை கூப்பிட்டோமா என்றால் ஆமாம். விஷா வாங்கிய ஆதாரம் கொடுக்கமுடியுமா என்றால் என்னிடம் இல்லை. மேற்கண்ட வீட்டில் திருமணம் ஆகும் வரை தங்கைகள் குடியிருந்தார் என்றால் ஆமாம். 3ஆம் பிரதிவாதி அந்த வீட்டில் இருந்தார் என்றால் ஆமாம். அம்மா கடைகள் எத்தனை கட்டினார் என்றால் தம்பி அனுப்பிய பணத்தில் அப்பா நிலம் வாங்கியிருந்தார் அந்த நிலத்தை விற்றுவிட்டு மேற்படி இடத்தில் 4 கடைகள் கட்டபட்டது. அவ்வாறு கட்டியது அம்மாதான் என்றால் அப்பா, அம்மா மற்றும் நான் பணம் 2ஆம் பிரதிவாதியுடையது. அவ்வாறு கடை கட்டியது எந்த வருடம் என்றால் 2000 வருடம் இருக்கும். கடை கட்ட எவ்வளவு பணம் செலவானது 2 1/2 லட்சத்திலிருந்து 3 லட்சம் செலவானது. நிலம் விற்றதிலிருந்தும், வில்சன் மனைவி தாலி செயின் விற்றதிலிருந்தும், வில்சன் அனுப்பியதிலிருந்தும் கட்டபட்டது. மேற்படி மூன்ற வகையிலும் எவ்வளவு பணம் வந்தது என்றால் அது எவ்வளவு என்று தெரியாது. நான் கட்டியது என்று சொல்கிறேனே நான் போய் கட்டினேனா என்றால் எனக்கு வீடு யாகப்பா நகரில் உள்ளது. வீடு கட்டியது எங்கு என்றால் 99 துளசாபுரம்,Co-operative colony. அப்பா எந்த வருடம் இறந்தார் என்றால் 2008. கடை வாடகை அம்மாதான் உயிருடன் இருக்கும் வரை வசூலித்து செலவு செய்தார் என்றால் ஆமாம். 2007 ஆம் ஆண்டு 2ஆம் பிரதிவாதி வெளிநாட்டிலிருந்து வந்தபிறகு 3ஆம் பிரதிவாதிக்கு வேலை இல்லாததால் ஒரு கடை வாடகையை அவரை வசூல் செய்துகொள்ளசொன்னார். சொத்து அம்மா பெயரில் இருந்தாலும 2ஆம் பிரதிவாதிக்குதான் சொந்தம் என்று சொல்லுகிறேனா என்றால் ஆமாம். அம்மா லோன்

போட்டுதான் வீடு கட்டினார் என்றால் இல்லை ஜெராக்ஸ் மிசின் வாங்கதான் வங்கி கடன் வாங்கினார். அம்மா ஜெராக்ஸ் கடனை தீர்த்துவிட்டாரா என்றால் அந்த கடனை 2ஆம் பிரதிவாதி வில்சன் தான் அடைத்தார். அவ்வாறு கடனை அடைத்தார் என்பதற்கு ஆதாரம் உள்ளதா என்றால் அப்பா கணக்கிற்கும் சின்னதம்பி தினேஷ் கணக்கிற்கும் பணம் அனுப்பியுள்ளார். 3ஆம் பிரதிவாதிக்கு திருமணம் ஆகி ஒரு பொண்ணு உள்ளது. 2ஆம் பிரதிவாதி அவருடைய மனைவிக்கு பணம் அனுப்புவாரா என்றால் தனிபட்ட முறையில் அனுப்பியது இல்லை. 2ஆம் பிரதிவாதியின் மனைவியை பராமரித்தது என்னுடைய தாயார் என்றால் தம்பி பணம் அனுப்புவான் அம்மா பார்த்து கொள்வார். நான் சொன்ன மொத்த சாட்சியத்திற்கும் ஆதாரம் எதுவும் இல்லை என்றால் அப்பா பெயரில் அனுப்பிய சீலிப்பு உள்ளது, என் பெயரில் அனுப்பிய சீலிப் உள்ளது. பாகம் பிரித்து தரச்சொல்லி வழக்கறிஞர் அறிவிப்பு வந்ததா என்றால் வந்தது. அதற்கு பதில் அனுப்பினேனா என்றால் இல்லை. சொந்தகாரர்கள் பிரச்சனை வேண்டாம் சாமாதானமாக பேசுங்கள் என்று சொன்னார். அந்த சொந்தகாரர் யார் என்று சொல்லமுடியுமா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் வெளிநாடு போய் சம்பாதிக்கவில்லைஎ ன்றும், பணம் அனுப்பவில்லை என்றும் அவரின் குடும்பத்தையே அம்மாதான் பார்த்தார் என்றும் சொன்னால் சரியல்ல. அம்மா வசதியான வீட்டார் என்றும் அவர்தான் மனை வாங்கி வீடு கட்டினார் என்றும் சொன்னால் சரியல்ல. அம்மாவின் அப்பா அவர் மனைவி இறந்தபிறகு எங்கள் வீட்டிலும் என் சித்தி வீட்டிலும்தான் இருந்தார். நானும் என் தம்பி வில்சனும் சேர்ந்து பேசிகொண்டு தாவா சொத்து அம்மா சாம்பாத்தியம் இல்லை என்றும் தம்பி சொத்தும் என்றும் கட்சி செய்கிறோம் என்றால் சரியல்ல. அம்மா சொத்து என்பதால் அவர் அனைத்து குழந்தைகளுக்கு பங்கு உண்டு என்று சொன்னால் இல்லை. வெளிநாட்டிலிருந்து வந்தபிறகு அம்மா திருப்பி எதுவும் எழுதி கொடுத்தாரா என்றால் அம்மா பத்திரத்தை தான் 2ஆம் பிரதிவாதியிடம் ஒப்படைத்தார் அவர் பார்த்து என்ன செய்கிறாரோ செய்யட்டும் என்று சொன்னார் அந்த பத்திரம் அம்மா இருந்த அந்த வீட்டில்தான் இருந்தது என்றால் ஆமாம். அந்த வீட்டில்தான் சகோதரரும் குடியிருந்தார்கள் என்றால் சின்ன தம்பி மேலே இருந்தார் பெரிய தம்பி அம்மாவுடன் இருந்தார். நான் உண்மை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை மேற்கண்ட குறுக்குவிசாரணை ஏற்றுகொள்ளப்படுகிறது.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

**(ஒம்/- ப ,நாகராஜன்)**
**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**